## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் எது?
2. பாரதியார் சிலப்பதிகாரத்தை எவ்வாறு பாராட்டுகிறார்?
3. ஆயிரம் கண்ணோன் யார்?
4. சூளாமணி எச்சமயக் காப்பியம்?
5. பாஞ்சாலி சபதத்தின் அமைப்பு என்ன?
6. மாங்கனி கண்ணதாசனால் எப்போது எழுதப்பட்டது?
7. மாங்குடி மருதனார் யார்?
8. பாவின் பெயரால் அமைந்த எட்டுத்தொகை நூல் எது?
9. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
10. பொருநன் என்னும் சொல் தரும் பொருள் என்ன?
11. செள்ளை என்பதன் பொருள் என்ன?
12. ஏறு தழுவுதல் என்றால் என்ன?
13. மருதத்திணையின் உரிப்பொருள் யாது?
14. கபிலர் யாருக்குத் தமிழ் அறிவித்தார்?
15. ஆடவருக்கு உயிர் எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. சிலப்பதிகாரத்தின் காப்பிய நோக்கம் என்ன?
2. இந்திரவிழா நடத்த முடிவு செய்தது எவ்வாறு?
3. குகனது தோற்றமும் பண்பும் பற்றி எழுதுக.
4. வீரத்தாய் காப்பியத்தின் நோக்கம் என்ன?
5. திருமுருகாற்றுப்படை குறித்து எழுதுக.
6. சேரர்களின் ஆட்சிமுறை பற்றிக் குறிப்பிடுக.
7. குறிகேட்டல் என்பது பற்றிக் கூறுக.
8. ஊடல் தணிதல் என்பது பற்றி விளக்குக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) வில்லிபாரதத்தின் காப்பியச் சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் சமூக சீர்திருத்த உணர்வு பற்றிக் குறிப்பிடுக.

2. (அ) குறிஞ்சிச் செய்யுட்களின் இலக்கிய நலம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மருதத்திணைப் பாடல்களின் இலக்கிய நலம் பாராட்டுக.

3. (அ) அக இலக்கியங்களில் கைக்கிளைச் செய்யுள்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெருந்திணைக்குரிய இலக்கணத்தை விவரிக்க.

***